# திருவருகைக் காலம் முதலாம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு C

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எரேமியா நூலிலிருந்து வாசகம் 33:14-16,

பதிலுரைப்பாடல் திபா 25:4-5, 8-9, 10,14,

கிறிஸ்துவின் வருகைக்கென்று திருத்தூதர் பவுல்

தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3:12-4:2,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 21: 25-28, 34-36

## திருப்பலி முன்னுரை:

இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர, சகோதரிகளே இறை இயேசுவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று புதிய வழிபாட்டு ஆண்டைத் தொடங்குகிறோம். இந்த வழிபாட்டு ஆண்டில் ஞாயிறு மற்றும் பெருவிழா நாட்களில் மூன்றாம் ஆண்டுக்கான வாசகங்களும், வார நாட்களில் முதல் ஆண்டுக்கான வாசகங்களும் வாசக நூலிலிருந்து தேர்வு செய்யப்படும். திருமகன் பிறப்புக்காக சிறப்பான வகையில் தங்களையே அணியமாக்கும் திரு அவையின் அன்புமக்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

இன்று நாம் திருவருகைக் காலத்திற்குள் காலடி எடுத்து வைக்கின்றோம். இயேசுவினுடைய பிறப்பிற்கு முன்னுள்ள நான்கு வாரங்களும் திருவருகைக் காலம் என்று அழைக்கப்படுகின்றது. கிறிஸ்துவின் பிறப்பை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாட நம்மைத் தயாரிக்கும் காலமாக இக்காலம் அமைகின்றது. இயேசுவின் இரண்டாம் வருகையோடு இக்காலத்தை தொடர்புபடுத்தி சிறந்த அறிவூட்டலை இறைவார்த்தைகள் நமக்கு வழங்குகின்றன. எனவே இக்காலத்தின் மகிமையையும், பெருமையையும், புனிதத் தன்மையையும் ஆடம்பரங்களாலும், களியாட்டங்களாலும் கறைபடுத்தாதிருப்போம். இயேசுவினுடைய பிறப்பை அது குறித்துக்காட்டும் அன்பு, பகிர்வு, எளிமை, தோழமை முதலிய வாழ்க்கைப் பண்புகளோடு பொருளுணர்ந்து கொண்டாட இறையருள் வேண்டித் தொடரும் பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**திருச்சபைக்காக:**

கருணைக் கடலே இறைவா! உம்முடைய திருவருகைக்காக இறைமக்களைத் தயார்படுத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து, அவர்கள் இறைமக்களை நல்ல முறையில் தயாரிக்க வேண்டிய வார்த்தைகளையும், செய்திகளையும் அவர்களுடைய வாயில் ஊட்டி, ஞானத்தையும், வல்லமையையும் அவர்கள்மேல் நிறைவாகப் பொழிந்து அவர்களை ஆசீர்வதித்துக்காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆதரித்துக் காக்கும் இறைவா!**

ஆயனில்லா ஆடுகள்போல இன்று தவித்து நிற்கும் மக்களை கருணையுடன் கண்ணோக்கிப் பாரும். அவர்களின் துன்ப துயரங்களைப் போக்கி, அவர்கள் சரியான திசையை நோக்கிப் பயணிக்கவும், என்றும் அமைதியையும், உடல், நலத்தையும், பாதுகாப்பையும் பெற்று வாழவும், உமது அன்பின் சிறகுகளுக்குள் அவர்களை வைத்துக் காத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அளவற்ற அன்புக்கு அடித்தளமான இறைவா!**

மழையினால் பாதிக்கப்பட்ட எல்லாக் கிராமங்களிலும் பொருள் சேதம், மனஉளச்சல், வேதனைகள், உயிர் சேதம் இவற்றின் விளைவாக வாழ்வையே இழந்து தவிக்கும் எம் சகோதர சகோதரிகளின் துயர்துடைக்க உம் கரம் பற்றிட தேவையான அருளை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உன்னைப் படைத்தவரை உன் வாலிப நாட்களில் நினை என்று சொன்ன எம் இறைவா!**

இளைஞோர் தங்கள் வாழ்வில் நல்ல சிந்தனைகளையும், நற்செயல்களிலும், விசுவாச வாழ்வில் நிலைத்து நின்று கிறிஸ்துவின் மதிப்பீடுகளை தங்கள் வாழ்வில் எந்நாளும் சான்றுபகர தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எல்லாருக்கும் எல்லாம் ஆன எம் அன்பு இறைவா!**

வரும் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவின் முன் தயாரிப்புகளை நாங்கள் வெறும், வெற்று வெளி அடையாளங்களை மையப்படுத்தி வாழாமல் ஆன்மீக தயாரிப்புகளில் எங்களை புதுப்பித்துக் கொண்டு உம் பிறப்பு ஏழைகளுக்கு நற்செய்தியாக அமைந்தது போல நாங்களும் நற்செய்தியின் தூதுவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அனைவரையும் உயிர்த்தெழச் செய்யும் அன்புத் தந்தையே இறைவா!**

இப்பொழுது கஜா புயலால் பாதிப்புக்குள்ளாகிய பகுதிகளில் தங்கள் இருப்பிடம் இழந்து, உறவுகளை இழந்து, வேதனையில் தவிக்கும் எம் சகோதர, சகோதரிகளுக்கு நீரே ஆறுதலாய் இருந்து, அவர்களைத் தேற்றி, மீண்டும் பழைய இயல்பு வாழ்க்கைத் திரும்ப வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.